நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியம்,
கண்ணூர்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை- வளர்மதி கிருஷ்ணன்

ந.க.எண்.,ஊ.ம.எண்.: 78 /2024-2025 நாள்- 12.06.2024

பொருள் மனை பிரிவு- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு- நாமக்கல் மாவட்டம்- நாமக்கல் வட்டம்- புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியம்- கண்ணூர்பட்டி ஊராட்சி/கிராமம் ச.எண்-181/7,8,184/6B1&185/1A,1B1-ல் 1.85 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைபிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதியுடன் மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி அளவில் இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடுதல்-தொடர்பாக.

பார்வை

1.அரசாணை எண்-79,வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ4(3))த்துறை நாள்.04.05.2017

2.அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019

3.அரசாணை எண்.138,வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ4(3))த்துறை நாள்.04.06.2004

4.உதவி இயக்குனர், நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல், அவர்களின் கோப்பு எண். NKL/ XMLUZK3V/9777/2023 மற்றும் SWP/DTCP/NAMAKKAL/LAYOUT No.168/2023,நாள்:10.05.2023.

5.திரு.C.சேகர் மற்றும் S.அழகரசன் த/பெ.சின்னு, 98,பாரதி நகர்,சௌண்டம்மன் கோவில் தெரு, மணியனூர்,கொண்டலாம்பட்டி,சேலம்-636010. விண்ணப்ப நாள்:

****

உத்தரவு

பார்வை 4ல் கண்ட உதவி இயக்குனர், நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அனுமதி கடிதத்தின் படி, நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டாரத்திற்கு உட்பட்ட புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், கண்ணூர்பட்டி ஊராட்சி/கிராமம், ச.எண்-181/7,8,184/6B1&185/1A,1B1-ல் 1.85 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைபிரிவுக்கு நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் அவர்களால் சில நிபந்தனைகளின் படி குடியிருப்பு மனை பிரிவிற்கான SWP/DTCP/NAMAKKAL/LAYOUT No.168/2023 என்ற எண்ணிடப்பட்டு உத்தேச குடியிருப்பு மனைபிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு வரப்பெற்றுள்ளது. மேலும் நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், கண்ணூர்பட்டி ஊராட்சி/கிராமம் ச.எண்-181/7,8,184/6B1&185/1A,1B1-ல் 1.85 ஏக்கர் பரப்பளவில் உள்ள நிலமானது நாமக்கல் மாவட்டம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் அலுவலகத்தால் வகைப்படுத்தப்படாத (Unclassified Area) பகுதியில் அமைகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தேச மனை பிரிவிற்கான பரப்பு-7508.00 ச.மீ/ 1.85 ஏக்கர்

மேற்காணும் உத்தேச குடியிருப்பு மனை பிரிவு அமையும் இடத்திற்கு மனையிட தொழில்நுட்ப ஒப்புதல் அனுமதி வழங்கப்பட்டு நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் அவர்களின் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற குடியிருப்பு மனைபிரிவு வரைபடம் முழுமையாக பரிசீலனை செய்யப்பட்டு பார்வை-3ல் காணும் அரசாணையின் படி மேற்கண்ட இடத்திற்கு 3% மார்க்கெட் வால்யூ கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என தெரிவித்ததின் படி மனுதாரர் கீழ்கண்ட கணக்கு தலைப்பில் கட்டணம் செலுத்தியுள்ளார்.

Scanned with OKEN Scanner

மனையிட ஒப்புதல் கட்டணம்-5248.49 ச.மீ (ஒரு ச.மீ[illegible]

5248.49 x 123.55 x 3/100 = Rs.19500/-

0217- Urban Development -60 Other Urban Development Scheme-800 Other Receipts-As Receipt under land conversation-27 Non Taxation Fees-09 Collections. D.P.C-0217-60-800-As-22709	சலான் மூலம் அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. ChallanNo-

தற்சமயம், மேற் நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், கண்ணூர்பட்டி ஊராட்சி/கிராமம் ச.எண்- 181/7,8,184/6B1&185/1A,1B1-ல் 1.85 ஏக்கர் பரப்பளவில் அமைய உள்ள இடத்திற்கு கண்ணூர்பட்டி ஊராட்சி மன்றம், கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஊராட்சி ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகள்-

1. பார்வை 4ல் காணும் உதவி இயக்குனர், நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் உத்தேசி மனையிட தொழில்நுட்ப ஒப்புதல் கடிதத்தில் தெரிவித்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் பின்பற்றப்பட வேண்டும்.
2. உத்தேச மனையிட தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடத்தில் உள்ள அளவு விபரங்களை இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றியமைத்தல் கூடாது.
3. ஒப்புதல் வழங்கப்படும் மனையிடம் குடியிருப்பு வீடுகள் அமைப்பதற்கு மட்டும் அனுமதிக்கப்படுகிறது. அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழிற்சாலை ஏதும் ஏற்படுத்த அனுமதியில்லை.
4. மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதுமிருந்து செலுத்த வேண்டி இருப்பது ஏதேனும் பின்னர் கண்டறியப்பட்டால், உரிய தொகையினை மனுதாரர் செலுத்தவேண்டும்.
5. அரசின் கொள்கை அளவிலான மனை ஒப்புதலில், அரசு மாற்றம் ஏதேனும் செய்து உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டால்,அந்த உத்திரவுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவர் ஆவார்.
6. பத்திரப்பதிவு மற்றும் நில உரிமை தொடர்பாக ஏற்படுத்தப்படும் சிவில் மற்றும் இதர வழக்குகளுக்கு மனுதாரரே முழு பொறுப்பாவார்.
7. திறந்தவெளி இடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தின் வாயிலாக, மனுதாரரால் விற்பனை செய்யப்பட உள்ள மனை நிலங்களுக்காக உயர் அழுத்த/சாதாரண மின் அழுத்த மின்சார பாதை(லைன்) அமைத்து மின்வசதி செய்து கொள்ள அனுமதி இல்லை.
8. விற்பனை செய்யப்படாத ஒவ்வொரு மனைபிரிவும் பத்திரபதிவு செய்யும்போது, மனைப்பிரிவு அங்கீகார வரைபட நகலினை இணைத்து பத்திர பதிவு செய்திட வேண்டும்.
9. மேற்குறிப்பிட்ட நிபந்தனையை மீறினாலோ, மனுதாரரால் அளிக்கப்பட்ட விபரங்கள் சரியானவை அல்ல என்று ஏதேனும் பின்னர் காலங்களில் அறியப்பட்டாலோ அல்லது அரசு விதிமுறைகள் மீறப்பட்டாலோ இம்மனை ஒப்புதல் முன்னறிவிப்பு இன்றி ரத்து செய்ய ஏதுவாகும் என அறிவிக்கப்படுகிறது.

K. வளர்மதி
12/6/2024

தலைவர்

கண்ணூர்பட்டி ஊராட்சி

பெறுதல்-

C.சேகர் மற்றும் S.அழகரசன்

த/பெ.சின்னு,

98,பாரதி நகர்,சௌண்டம்மன் கோவில் தெரு,

மணியனூர்,கொண்டலாம்பட்டி,

சேலம்-636010

நகல்

1.உதவி இயக்குனர், நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல்.

2.சார்பதிவாளர், புதுச்சத்திரம் சப்ரிடி, நாமக்கல் மாவட்டம்.

3.வட்டார வளர்ச்சி அலுவலர், புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், நாமக்கல் வட்டம்.

Scanned with OKEN Scanner